[1987 ஏப்ரல் 20

1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் உதவி.

407—(* வினா எண் 10675) திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் தொழில் தொடங்க மூலதனம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) கடன் எவ்வளவு? மான்யம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985-86 ஆம் ஆண்டு ஐந்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 215 நபர்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து தொழில் தொடங்க ஆரம்ப முதலீட்டுக் கடன் பெற்றுள்ளார்கள்.

(ஆ) இவர்கள் பெற்றுள்ள மொத்த ஆரம்ப முதலீட்டுக் கடன் தொகை ரூ. 1.305 லட்சம் ஆகும். மான்யமாக இக்கழகம் எந்த தொகையும் வழங்கவில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழில் தொடங்கக்கூடியவர்களுக்கு, நகரங்களில் வசிப்பவர்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப் படுகிறது, கிராமங்களில் வசிப்பவர்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனியாக பிரித்துச் சொல்வதற்கு விவரங்கள் தற்போது இல்லை. தொழில் தொடங்குவதற்குக் கொடுக்கப்படும் கடன் ரூ. 25,000 அளவிற்கு மேல் போகக்கூடாது.

1987 ஏப்ரல் 20]

என்று விதி இருக்கிறது. அது கிராமப்புறத்திலே இருந்தாலும் சரி, நகர்ப்புறத்திலே இருந்தாலும் சரி, அந்த விதியை சற்றுத் தளர்த்தலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது? எத்தனை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன? இந்த ஆண்டு மேலும் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளதா என்பதைப் பற்றி அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கழகம் ரூ. 10 கோடி பங்கு முதலீட்டுடன் ஆரம்பிக்கவேண்டும் என்று ஆணைப் பிறப்பித்திருக்கிறது. இதுவரை ரூ. 5 லட்சம் முதல் பணமாக தந்திருக்கிறது. மற்ற விவரங்களைத் தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக—மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பகுதி மிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கின்றது என்று அங்கே ஒரு ஜின்னிங் பேக்டரி ரூ. 6 லட்சம் மதிப்பீட்டிலே செய்யப்பட இருந்தது. அது தற்போது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். கூடிய விரைவிலே செயல் முறைக்குக் கொண்டு வர அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாக கேட்டால் நிச்சயமாக தகவல் சேகரித்து தரப்படும். ஆனால் அப்படி ஒரு திட்டம் இருக்குமேயானால் நிச்சயமாக அரசு கைவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.